**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.S.கல்யாண மாரிமுத்து,**

கூடுதல் சார்பு நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.448/2024**

CNR.No.TNTL-0500-1836-2024

சுபா ... வாதி

//எதிர்//

1.சௌந்தரராஜன்

2.சுப்புலெட்சுமி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 15.11.2024 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 17.09.2025 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.மாரியப்பன் அவர்கள் ஆஜராகி இருந்த நிலையிலும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கதிரேசன் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாமலும், 1, 2 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜராகாததால் 06.06.2025 அன்று தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்...

Dated: 17.10.2025

**<u>தீர்ப்புரை</u>**

வழக்கானது, வாதிக்கு, பிரதிவாதிகள் ரூ.2,92,880/−மும் அதில் அசல்தொகை ரூ.2,40,000/− க்கு பிராது தேதி முதல் தொகை செலுத்தும் காலம்வரை 12% பின்வட்டியும் செலுத்தும்படிக்கும் மற்றும் வழக்கின் செலவுத் தொகையினை பிரதிவாதி, வாதிக்கு கொடுக்க உத்தரவிடக் கோரியும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 1 ன் படி வாதி வங்கியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **<u>வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:−</u>**

1.1. வாதியும் பிரதிவாதிகளும் நன்கு பழக்கமானவர்கள். பிரதிவாதிகள் இருவரும் கணவன் மனைவி ஆவார்கள். வாதியின் வீட்டு அருகே பிரதிவாதிகளும் வசித்து வந்தார்கள். வாதியின் வீட்டு அருகே பிரதிவாதிகள் ஆவின் பால் பூத் வைத்து தொழில் செய்து வருகிறார்கள். பிரதிவாதிகள் இருவரும் அவசர நிமித்தமாகவும், குடும்ப தேவைக்காகவும், வியாபார தேவைக்காவும் கடந்த 23.12.2022 அன்று ரூபாய் 2,40,000/−ஐ(இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும் ) வாதியின் வீட்டில் வைத்து ரொக்கமாக கடன் பெற்று கொண்டுள்ளார்கள். மேற்படி கடன் தொகையை வாதி பிரதிவாதிகளிடம், வாதி கேட்கும் போதோ அல்லது வாதி உத்தரவு பெற்ற நபருக்கோ திரும்ப செலுத்துவதாக ஒப்பு கொண்டு மேற்படி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 100 க்கு 1 வீதம் வட்டி தருவதாக ஒப்பு கொண்டு அதற்கு ஆதரவாக சாட்சிகள் முன்னிலையில் எழுதி கொடுத்துள்ளார்கள். அதனை ஒரு வருடத்தில் திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

1.2. வாதிக்கு பிரதிவாதிகள் இருவரும் ஒப்புக் கொண்டபடி மேற்படி கடன் தொகைக்கு வட்டி தொகையினை வாதிக்கு கடன் வாங்கிய தினத்தில் இருந்து வட்டியையோ அசலையோ பிரதிவாதிகள் இருவரும் ஒப்புகொண்டபப்டி மேற்படி

பிரதிவாதிகள் இன்று வரை செலுத்தவில்லை. வாதி பிரதிவாதிகளை நேரிலும் தொலைபேசியிலும் பலமுறை கேட்ட போதும் வீண் சாக்கு போக்கு சொல்லி காலம் கடத்தி வந்துள்ளார்கள். பிரதிவாதிகளின் செயல் நம்பிக்கை மோசடி மற்றும் சட்ட விரோதமாகும்.

1.3. எனவே வாதிக்கு பிரதிவாதிகளிடமிருந்து பிராது தொகை விவரத்தில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.2,92,880/- அசல் தொகை ரூ.2,40,000/-க்கு இந்த வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் பிரதிவாதிகள் தொகையை செலுத்தி தீர்க்கும் நாள் வரை பின் வட்டி சேர்த்து வாதிக்கு பிரதிவாதிகள் திரும்ப செலுத்த உத்தரவு வேண்டியும், இந்த வாக்கு செலவுத்தொகை வேண்டியும், வாதி இந்த வழக்கை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளார்.

2. 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தபோதிலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யததாலும் பிரதிவாதி திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 06.06.2025 அன்று தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டுள்ளார். எனவே வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. இந்நிலையில், வாதி பிராதில் கோரியுள்ள வகையில் பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்தவேண்டிய தொகையான ரூ.2,92,880/- ஐ செலுத்த கடமைப்பட்டவரா? வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே இங்கு ஆய்வுக்குரிய பிரச்சனையாகும்.

4. இவ்வழக்கில் 1, 2 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக உள்ளதாலும் வாதியே தனது வழக்கை நிரூபிக்க வேண்டும் என்பதாலும் வாதி தரப்பில் சாட்சியத்தை முன் நிறுத்த உத்தரவிட்டதன்பேரில் வாதி தரப்பில் வாதியான திருமதி.சுபா என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 ன் வாயிலாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. வாதி தனது தரப்பு வழக்கை நிரூபித்துள்ளாரா என்பதை காண்கையில், வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டுள்ளார். அவர் வழக்குரையில் கண்ட சங்கதிகளை அனுசரித்து பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு 1, 2 பிரதிவாதிகள் செலுத்தவேண்டிய தொகையான ரூ.2,92,880/- த்திற்கு வட்டியுடன் திரும்ப செலுத்தக்கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலிக்கையில் அது வாதிக்கு 1, 2 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த 23.12.2023 தேதியிட்ட கடனுறுதிச் சீட்டாக உள்ளது. அதில் 1, 2 பிரதிவாதிகள் தங்களது குடும்ப செலவுக்காக, வியாபார தேவைக்காக ரூ.2,40,000/-த்தை கடனாக பெறுவதாகவும், அதை மாதம் 1க்கு ரூபாய் 100க்கு வட்டி ரூ.1 (ஒன்று ) வீதம் வட்டியுடன் கொடுத்துவிடுவதாகவும் பணம் கொடுத்துவிட்டு கடனுறுதிச் சீட்டை பெற்றுக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி வாதியுடன் 1, 2 பிரதிவாதிகள் கடன் பரிவர்த்தனை செய்துவந்துள்ளார்கள் என்பதும் அதற்கு 1, 2 பிரதிவாதிகளால் கடனுறுதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. அந்த ஆவணத்தில் 1, 2 பிரதிவாதிகள் கையொப்பம் செய்துள்ளார்கள். எனவே வாதி 1, 2 பிரதிவாதிகளிடம் கடனுறுதிச் சீட்டில் கண்ட தொகையை வசூலிக்க அதிகாரம் உள்ளது. வா.சா.ஆ.4 யை பரிசீலிக்கையில் அது வாதி 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து கடனுறுதிச் சீட்டில் செலுத்தப்படவேண்டிய ரூ.2,40,000/-த்தை செலுத்த கோரி 1ம் பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பாக உள்ளது. வா.சா.ஆ.5 யை பரிசீலிக்கையில் அது 2ம் பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பாக உள்ளது. அதை வழக்குரை சங்கதிகளை அனுசரித்தே காணப்படுகிறது. வா.சா.ஆ.6 அந்த அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்று கொண்டதற்கான ஒப்புகை அட்டையாக உள்ளது. வா.சா.ஆ.7 ஆனது அந்த அறிவிப்பை 2ம் பிரதிவாதி பெற்று கொண்டதற்கான ஒப்புகை அட்டையாக உள்ளது. எனவே அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது உறுதியாகிறது.

பதிலறிவிப்பு எதுவும் அனுபப்படவில்லை.

6. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள், சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் வாதியின் வாய்மொழி சாட்சியத்தை பரிசீலிக்கையிலும் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் வழக்கை மறுத்து கட்சி செய்யாதநிலையிலும் வாதி வழக்குரையில் தெரிவித்த வகையில் 1, 2 பிரதிவாதிகள் வாதியிடம் 23.10.2023 தேதியிட்டு ரூ.2,40,000/ம் கடனாக பெற்று அதற்கு வா.சா.ஆ.3 கடனுறுதிச் சீட்டு எழுதிக் கொடுத்துள்ளதும், அந்த தொகையை செலுத்த கோரி வாதி 1, 2 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளதும் தெரியவருகிறது. 1, 2 பிரதிவாதிகள் பணத்தை செலுத்தாமல் இருப்பது தெரியவருகிறது.

7. சாட்சிய சான்றாவணங்களை பரிசீலிக்கையில் வா.சா.ஆ.3 கடனுறுதிச் சீட்டில் கண்ட 1, 2 பிரதிவாதிகளின் கையொப்பம் 1, 2 பிரதிவாதிகளால் மறுக்கப்படவில்லை. பிரதிவாதி தரப்பில் வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டில் கண்ட கையெழுத்து தங்களுடையது இல்லையென்றோ கடனுறுதிச் சீட்டு தங்களுடையது இல்லை என்றோ மறுக்கவில்லை. சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலகட்டத்திற்குள் வாதியால் அறிவிப்பும் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு பதிலறிப்பு வழங்கப்படவில்லை.

8. ஒரு கடனுறுதிச் சீட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த கடனுறுதிச் சீட்டை பிரதிவாதிகள் மறுக்காத நிலையில் அந்த கடனுறுதிச் சீட்டை வைத்துள்ள ஒரு நபர் அந்த கடனுறுதிச் சீட்டு தன்னால் கொடுக்கப்பட்ட கடனுக்கு அதை நிறைவேற்றும்விதமாக கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த காரணத்தை பிரதிவாதிகள் தரப்பில் மறுத்துரைக்கும் வரையில் 1, 2 பிரதிவாதிகளால் பெறப்பட்ட கடனுக்கு அந்த கடனுறுதிச் சீட்டை கொடுக்கப்பட்டதாகவே எடுத்துகொள்ள வேண்டும் என மாற்றுமுறை ஆவணசட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வாதியின்

வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையிலும் சாட்சிய சான்றவணங்களின் அடிப்படையிலும் இந்த வழக்கு கடனுறுதிச் சீட்டை பிரதிவாதிகள் பெற்ற சட்டப்படியான கடனை தீர்க்கும் பொருட்டு வழங்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முதல்நிலையில் அனுமானிக்கிறது. எனினும் அந்த அனுமானம் மறுத்துரைக்கதக்க அனுமானம் ஆகும். 1, 2 பிரதிவாதிகள் தரப்புக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சான்றுக்கான தரமானது சாத்தியகூறுகளின் மேம்பட்ட நிலை ஆகும். வழக்கு கடனுறுதிச் சீட்டு குறித்து இந்நீதிமன்றம் சார்ந்துள்ள அனுமானத்தை மறுத்தளிப்பதற்கு பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றவாணங்கள் அடிப்படையில் தனது தரப்பு வழக்கை சாத்தியகூறுகள் அடிப்படையில் நிரூபித்தலே போதுமானது ஆகும். 1, 2 பிரதிவாதிகள் கடன் பெற்றதும் மறுக்கப்படவில்லை. வா.சா.ஆ.3 ல் பிரதிவாதிகள் கையொப்பம் செய்துள்ளதால் அதை கடனுக்காக வாதிக்கு வழங்கப்பட்டதாகவே கருதஇயலும். மேலும் 1, 2 பிரதிவாதிகளின் கடனுறுதிச் சீட்டு வாதி வசம் எவ்வாறு வந்தது என்பதை தெரிவிக்கும் வகையிலோ வழக்குரை சங்கதிகளை மறுத்தோ 1, 2 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் தோன்றி ஆட்சேபணை தெரிவிக்காதநிலையில் வாதியின் வழக்கு நிரூபிக்கப் பட்டதாகவே ஏற்க இயலும். எனவே வழக்குரை சங்கதிகளை மறுத்துரைக்க முகாந்திரம் இல்லை என்பதால் தான் 1, 2 பிரதிவாதிகள் தோன்றதரப்பினராக நீடித்துவருகிறார்கள் என்ற வாதி தரப்பு வாதம் ஏற்கத்தக்காகவே உள்ளது. எனவே, வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், 1, 2 பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்த வேண்டிய தொகை செலுத்தவில்லை என்றும், வாதியின் வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

Dated: 17.10.2025

**முடிவாக, இந்த வழக்கு வாதியின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி வாதிக்கு செலுத்தவேண்டிய தொகை ரூ.2,92,880/- ஐ தீர்ப்பு தேதியில் இருந்து இரண்டு மாத காலத்திற்குள் செலுத்தவேண்டும் என்றும், பிராது காலம் முதல் தொகை செலுத்தப்படும் வரையிலான காலத்திற்கு அசல் தொகையான ரூ.2,40,000/-க்கு ஆண்டுக்கு 6% பின்வட்டியும் செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S KALYANA MARIMUTHU
uploaded on 24.10.2025
Digitally signed by S KALYANA MARIMUTHU
Date: 2025.10.24 14:44:46 -0400

கூடுதல் சார்பு நீதிபதி
திருநெல்வேலி

1) <u>வாதி தரப்பு சாட்சி:-</u>

வா.சா.1 - திருமதி.சுபா (வாதி)

2) <u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 - | வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட ஒளி நகல், |
| வா.சா.ஆ.2 - | வாதியின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் அசலுடன் ஒப்பிடப்பட்ட ஒளி நகல். |
| வா.சா.ஆ.3 | 23.12.2023 வாதிக்கு பிரதிவாதிகள் எழுதி கொடுத்த கடனுறுதிச் சீட்டு அசல். |
| வா.சா.ஆ.4 | 25.04.2024 தேதியிட்ட வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.5 | 2ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.6 | 1ம் பிரதிவாதிக்கு சார்பான ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.7 | 2ம் பிரதிவாதிக்கு சார்பான ஒப்புகை அட்டை |

**3) <u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:–</u>** இல்லை

S KALYANA MARIMUTHU

uploaded on 24.10.2025
Digitally signed by S KALYANA MARIMUTHU
Date: 2025.10.24 14:45:04 -0400

கூடுதல் சார்பு நீதிபதி
திருநெல்வேலி

கூடுதல் சார்பு நீதிமன்றம், திருநெல்வேலி
அ.வ.எண். 448/2024
சீரான / வரைவு – தீர்ப்புரை
17.10.2025,

Dated: 17.10.2025